By mail

தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை - 600 006.
ந.க. எண்.14103 / அ4 / இ1 / 2022, நாள். 07 .04.2022.

*****

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – ஆய்வக உதவியாளர் பணியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராகப் பணி வழங்கியது – தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கக் கோரியது சார்பாக விவரங்கள் கோருதல் – சார்பு.

**பார்வை:** அரசுக் கடிதம் எண். 5948/ப.க.4(2)/2021-1, பள்ளிக் கல்வித்துறை, நாள். 14.03.2022.

*****

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தின் மீது அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களின் கவனம் ஈர்க்கலாகிறது.

26.02.2011க்குப் பிறகு ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் / பதவி உயர்வு பெற்ற மொத்தப் பணியாளர்களின் விவரம் மற்றும் ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட நபர்களின் விவரங்களைக் **கல்வி மாவட்டம்வாரியாகப் பெற்று,** இத்துடன் **இணைக்கப்பட்ட படிவத்தில் (பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட ஆணை நகல்களுடன்) தொகுத்து 22.04.2022க்குள் இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)** பெயரிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் விவரங்கள் அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் இதில் தனிக்கவனம் செலுத்தி, துரித நடவடிக்கை மேற்கொண்டு, மேற்குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தவறாமல் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** படிவம்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

7/4/2022

படிவம்

26.02.2011க்குப் பிறகு ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற்ற பணியாளர்கள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | பணியாளரின் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் (திரு. / திருமதி / செல்வி) | ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் / பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் / மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் எண் மற்றும் நாள் | தகுதிகாண் பருவம் கோரிக் கருத்துருக்கள் பள்ளிக் கல்வி ஆணையருக்கு அனுப்பப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் கோரி விண்ணப்பிக்காத பணியாளர்கள் விவரம் | இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து மீளவும் ஆய்வக உதவியாளராக சென்றவர்கள் விவரம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |

முதன்மைக் கல்வி அலுவலர்

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

7/4/2022